FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364143

1. District : Salem PS: VAAC Year: 2026 FIR No.: 4/AC/2026 Date: 13.5.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(a) and 7A
(ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 1) on 09.04.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 2) on 11.05.2026 at 12.45hrs
Time Period : Time from : Time to : 3) on 11.05.2026 at 14.00hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time : 12.05.2026 at 18.00hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : 13.05.2026 at 08.30hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South west, 30kms
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : Panchayat Union Office, Magudanchavadi
முறைக் காவல் எண் முகவரி Salem District

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Manimegalai (b) Father's/ Husband's Name : Kandasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address : D.No. 6/49, Karuvoorankadu, Ko. Elayampalayam, Tiruchengode, Namakkal
தொழில் Business முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Thr. Karthik, Zonal Deputy BDO, Magudanchavadi Panchayat Union office, Salem District.
2) Thr. Deepak, Civil Engineer (a private individual)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet herewith enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

13/5/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

R. D. Ramkumar 13.5.2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.5.26 at 9.35hrs

Name: பெயர் R. D. Ramkumar
Rank: நிலை .....No. எண் .....
Inspector of Police
V4 & C1 Salem

சேலம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/AC/2026 u/s 7(a) and 7A of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது: 12.05.2026-ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை சுமார் 18.00 மணிக்கு சேலம் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருமதி.K.மணிமேகலை, க.பெ கந்தசாமி, கதவு எண். 6/49, கருவூரான்காடு, கோ.இளையம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர்: திருமதி.K.மணிமேகலை, க.பெ கந்தசாமி, கதவு எண். 6/49, கருவூரான்காடு, கோ.இளையம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, சேலம். ஐயா, நான் நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தாலுக்காவில் உள்ள கோ.இளையம்பாளையத்தில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகின்றேன். எனது கணவர் விவசாயம் செய்து வருகிறார். நானும், எனது நண்பர் செந்தில்குமார் அவர்களும் தொழில்முறை Partner ஆக சேர்ந்து தொழில் செய்ய முடிவு செய்தோம். அதன்படி, அவருக்கு சொந்தமான சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி A தாழையூர் சங்ககிரி ரோட்டில் உள்ள சுமார் 450 சதுர அடி நிலத்தில் கடை ஒன்றை சுமார் 3 மாதங்களுக்கு முன்பு கட்டி முடித்தோம். அதில் CSK Coffee Shop என்ற பெயரில் பேக்கரி வைக்க முடிவு செய்தோம். ஆனால், மேற்படி கடையின் மின் இணைப்பானது தற்காலிக மின்இணைப்பாக இருந்து வந்தது. அதனால் மின் கட்டணம் அதிகமாக கட்டி வந்தோம். ஆகையால் கடையின் மின் இணைப்பை நிரந்தர மின் இணைப்பாக மாற்ற கடந்த 2026 பிப்ரவரி மாதம், மகுடஞ்சாவடி மின்வாரிய அலுவலகத்திற்கு நானும் எனது நண்பர் செந்தில்குமாரும் சென்று விசாரித்தோம். அப்போது அவர்கள் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று கட்டிட அனுமதி பெற்ற பின்பு தான் நிரந்தர மின் இணைப்பாக மாற்ற முடியும் என்று சொன்னார்கள். அப்போது அந்த அலுவலகத்தில் இருந்த ஓயர்மேன் ஒருவர் கட்டிட அனுமதி சம்மந்தமாக இஞ்சினியர் தீபக் என்பவரை பாருங்கள் என்று சொல்லி அவரது செல்போன் நெம்பர் 7010126491 ஐ கொடுத்தார். அதன்படி, நான் எனது நண்பர் செந்தில்குமார் அவர்களின் செல்போன் நெம்பர் 9715121841 என்ற நம்பரில் இருந்து அவருக்கு போன் செய்து கட்டிட அனுமதி பெறுவது சம்மந்தமாக பேசினேன். அப்போது அவர்

மகுடஞ்சாவடி பஸ் ஸ்டாப் அருகில் உள்ள அவரது அலுவலகத்திற்கு வரும்படி கூறியதால் நாங்கள் அங்கு சென்று தீபக் அவர்களை சந்தித்தபோது கட்டிட அனுமதி சம்மந்தமான ஆவணங்களை பெற்றுக்கொண்டும் ஆன்லைனில் மனு செய்வதற்காக ரூ.2,500/- வாங்கிக்கொண்டு தகவல் தெரிவிப்பதாக சொல்லி அனுப்பி விட்டார். ஆனால் அவரிடமிருந்து மனு சம்மந்தமாக தகவல் ஏதும் வராததால் அவரிடம் விசாரித்தேன். அப்போது அவர் தான் வேலையாக இருப்பதாகவும், மனு செய்தவுடன் தகவல் தெரிவிப்பதாக சொல்லிவிட்டார். பின்னர் 2.4.2026ம் தேதி எங்களது மனுவை Online-ல் விண்ணப்பம் செய்துவிட்டதாகவும், அதற்கான அரசுக்கு கட்ட வேண்டிய களஆய்வு தொகையாக ரூ.2422/- கட்டியதாக கூறி எங்களிடம் நகல் கொடுத்தார். பின்னர் 9.4.2026ம் தேதி இஞ்ஜினியர் தீபக் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திக் அவர்களும் எங்களது கடைக்கு வந்து அளந்து பார்த்துவிட்டு சென்றார்கள். அன்றைய தினமே இஞ்சினியர் தீபக் அவர்கள் எனக்கு போன் செய்து ஒரு சதுரஅடிக்கு 40 ரூபாய் என்ற வீதத்தில் எங்களது கடை 450 சதுர அடி உள்ளதாகவும், அதற்கு ரூ.18,000/-ம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டும் என்றும், அது போக மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கார்த்திக் அவர்களுக்கு தனியாக ரூபாய் 20,000/-ம் கொடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். அதற்கு நான் அவரை நேரில் சந்தித்து குறைச்சிக்க சொல்லி பேசுறேன் என்று சொல்லிவிட்டு நாங்கள் ஒரு நாள் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது கார்த்திக் அவர்கள் இல்லாத காரணத்தால் அந்த அலுவலகத்தின் போர்டில் இருந்த கார்த்திக் அவர்களின் செல்போன் நெம்பருக்கு போன் செய்து எங்களது கடை கட்டிட அனுமதி சம்மந்தமாக பேசினேன். ஆனால் அவர் பின்னர் பேசுவதாக கூறி போனை வைத்துவிட்டார். மேலும் இரண்டு, மூன்று முறை அவரை நேரில் சந்திக்க முயற்சி செய்தபோதும் அவரை சந்திக்க முடியவில்லை. பின்னர் 11.5.2026 ம் தேதி இஞ்ஜினியர் தீபக் அவர்களுக்கு போன் செய்து கார்த்திக் அவர்களை சந்தித்து அவர் கேட்ட தொகையை குறைக்க சொல்லி கேட்கலாம் என்று முடிவு செய்திருப்பதாகவும், அவர் அலுவலகத்தில் இருப்பாரா என்று கேட்டேன். அதற்கு அவர் இருப்பார் அலுவலகம் சென்று பாருங்கள் என்று சொன்னார். அதன்படி நானும், எனது நண்பர் செந்தில்குமாரும் 11.5.2026ம் தேதி காலை சுமார் 11 மணிக்கு மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் சென்று கார்த்திக் அவர்களை சந்தித்து கட்டிட அனுமதி சம்மந்தமாக விசாரித்தேன். அதற்கு அவர் நீங்க இஞ்சினியர் தீபக் அவர்களை பாருங்கள் என்று சொன்னார். அதற்கு

நான் அவர் உங்களுக்காக என்று அதிகமாக பணம் கேட்கிற மாதிரி இருக்கு சார் என்று தெரிவித்தேன். அதற்கு கார்த்திக் அவர்கள் நான் அவரிடம் பேசிக்கொள்கிறேன், நீங்கள் அவரை சென்று பாருங்கள் என்று சொல்லி அனுப்பிவிட்டார். நானும், எனது நண்பர் செந்தில்குமாரும் மதியம் 12.15 மணிக்கு இஞ்ஜினியர் தீபக் அவர்களின் அலுவலகத்திற்கு சென்று பார்த்தோம். அதற்கு அவர் அரசு கட்டணம் போக ரூ.13,000/-ம் மட்டும் கொடுத்தால் போதும் என்று கார்த்திக் அவர்கள் சொன்னதாக தெரிவித்தார். அதற்கு சரிங்க சார் பணத்தை ரெடி செய்து விட்டு வருகிறோம் என்று கூறிவிட்டு, அன்று மதியம் சுமார் 2 மணிக்கு மீண்டும் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த கார்த்திக் அவர்களை சந்தித்து எஞ்ஜினியர் தீபக் அவர்கள் தங்களுக்கு ரூ.13,000/-ம் கொடுக்க வேண்டும் என்று கூறியதாக தெரிவித்து, அந்த தொகையில் ஏதாவது குறைக்க முடியுமா என்று கேட்டேன். அதற்கு அவர் இதுவே உங்களுக்காகதான் செய்கிறேன். மேலே இருக்கிறவங்களுக்கும் தர வேண்டும், நீங்க பணம் ரெடி செய்துவிட்டு வந்து பாருங்க, நான் Certificate தயார் செய்து போட்டுவிடுகிறேன் என்று கூறினார். எனக்கு இஞ்ஜினியர் தீபக் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திக் அவர்களுக்கு கையூட்டாக கேட்ட பணத்தை கொடுத்து எங்களது கட்டிட அனுமதி பெற விருப்பமில்லை. நான் தற்போது அவர்கள் கேட்ட ரூ.13,000/- லஞ்ச பணத்தை ஏற்பாடு செய்து வைத்துள்ளேன். அந்த பணத்துடன் நான் அவர்களை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே இஞ்ஜினியர் தீபக் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கார்த்திக் ஆகியோர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம்/-XXXXXX திருமதி.K.மணிமேகலை 12/5/26)

Sir, Received the computer-typed complaint on 12.05.2026 at 18.00 hrs, Sd XXXX (R.D.RAVIKUMAR) 12.5.2026, Inspector of Police, V&AC, Salem.

Sir, The genuineness of the informant was verified through sources and nothing came to adverse and the integrity and antecedents of the accused also verified through sources and found to be not good. Hence, I obtained oral concurrence from DVAC and registered a case in Salem V&AC Cr. No.04/AC/2026 u/s 7 (a) and 7A of the Prevention of Corruption Act 1988 as

amended in 2018 today 13.05.2026 at 08.30 hrs. Sd XXXX (R.D.RAVIKUMAR) . 13.5.2026, Inspector of Police, V&AC, Salem.

The original complaint and original FIR was sent to the Hon'ble court of the Principal District and Sessions Judge, Salem, and the remaining copies were sent to the officers concerned.

13.5.26

(R.D.RAVIKUMAR)
Inspector of Police,
Vigilance and Anti – Corruption,
Salem.